Source: *Tamil Murasu*, p2
Date: 9 June 2021

என்யுஎஸ் பேராசிரியருக்கு உயரிய விருது

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் ஆய்வு, தொழில் நுட்பத் துணைத் தலைவர் பேராசிரியர் லியூ பின்னிற்கு (படம்), பிரிட்டனின் 'ராயல் சொசைட்டி ஆஃப் கெமிஸ்ட்ரி' நூற்றாண்டு விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. கரிம மூலக்கூறுகள் மற்றும் நேனோ பொருள்களின் புத்தாக்கமிக்க வடிவமைப்பும் தொகுப்பும், தொடர்புத்திறனில் உன்னதம் ஆகிய காரணங்களுக்காக பேராசிரியர் லியூவிற்கு இந்த உயரிய விருது வழங்கப்பட்டு இருப்பதாக தேசிய பல்கலைக் கழகம் தெரிவித்தது. 1947ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இவ்விருதை இதற்கு முன் வென்றோரில் 50 பேர் பின்னர் நோபெல் பரிசையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.